## பொது நிர்வாகம், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு

# வளர்ந்துவரும் பிராந்தியங்களின் கிராமிய உட்கட்டமைப்பு அபிவிருத்தித் திட்டம் (RIDEP) – கடன் இலக்கம்: SL-P116

# செயற்றிட்டப் பணியாட் தொகுதியினரை ஆட்சேர்த்தல்

2017 முதல் 2028 வரையிலான காலகட்டத்தில், ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு நிறுவனத்தின் (JICA) நிதி உதவியுடன், 15,410 மில்லியன் ஜப்பானிய யென் மொத்த செலவில், வளர்ந்து வரும் பிராந்தியங்களின் கிராமிய உட்கட்டமைப்பு அபிவிருத்தித் திட்டத்தை (RIDEP) செயற்படுத்த இலங்கை அரசு ஏற்பாடு செய்துள்ளது. வடக்கு, கிழக்கு, வடமத்திய மற்றும் ஊவா மாகாணங்களில் கிராமிய வீதிகள், நடுத்தர மற்றும் சிறிய அளவிலான நீர்ப்பாசனம் மற்றும் குடிநீர் வழங்கல் வசதிகள் போன்ற அடிப்படை உட்கட்டமைப்புகளை மேம்படுத்துவதன் மூலம் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதும், உள்ளூர் மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதும் இந்த திட்டத்தின் நோக்கமாகும்.

ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு நிறுவனத்தின் JICA நிதி உதவியுடன் பொது நிர்வாகம், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சானது இந்தத் திட்டத்தை செயற்படுத்த அதிகாரம் கொண்ட முக்கிய நிறுவனமாகும். மேலும் இந்த திட்டத்தின் திட்ட முகாமைத்துவப் பிரிவு (PMU) மற்றும் திட்ட அமுலாக்கல் பிரிவுகளுக்கு (PIUs) பணியாளர்களை நியமிக்க 2019-03-05ஆம் திகதிய 01/2019ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றுநிருபத்தின் பிரகாரம் அமைச்சு விண்ணப்பங்களை அழைக்கிறது.

திட்டத்தில் பின்வரும் பதவிகளை நிரப்ப, கீழே குறிப்பிடப்பட்டுள்ள தகுதிகள் மற்றும் அனுபவமுள்ள இலங்கை குடிமக்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

| இல. | பதவிகள் | பதவிகளின் எண்ணிக்கை | சம்பள நிலை | சம்பள வரம்பு (+ அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட கொடுப்பனவுகள்) |
|---|---|---|---|---|
| **திட்ட முகாமைத்துவப் பிரிவிற்கு பணியாளர்களை ஆட்சேர்த்தல் (PMU) - கொழும்பு** | | | | |
| 1 | செயற்றிட்டப் பணிப்பாளர் | 01 | PS 2 | ரூபா 165,000.00 - ரூபா 185,000.00 |
| 2 | சிரேஷ்ட பொறியியலாளர் மற்றும் பெறுகை நிபுணர் | 01 | PS 3 | ரூபா 160,000.00 - ரூபா 175,000.00 |
| 3 | சுற்றாடல் மற்றும் சமூக அபிவிருத்தி நிபுணர் | 01 | PS 3 | ரூபா 160,000.00 - ரூபா 175,000.00 |
| 4 | திட்டக் கணக்காளர் | 01 | PS 4 | ரூபா 135,000.00 - ரூபா 150,000.00 |
| 5 | கணக்கியல் உதவியாளர் | 02 | | 2019-03-05ஆம் திகதிய 01/2019ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றுநிருபத்தின் பிரகாரம் |
| 6 | சாரதி | 02 | | |
| 7 | அலுவலக உதவியாளர் | 02 | | |
| **திட்ட அமுலாக்கல் பிரிவிற்கு பணியாளர்களை ஆட்சேர்த்தல் (PIUs) - (வடக்கு, கிழக்கு/வட மத்திய/ ஊவா மாகாணங்கள்)** | | | | |
| 8 | திட்டக் கணக்காளர் | 04 | PS 4 | ரூபா 135,000.00 - ரூபா 150,000.00 |
| 9 | பொறியியலாளர் மற்றும் இணக்க அதிகாரி | 04 | PS 4 | ரூபா 135,000.00 - ரூபா 150,000.00 |
| 10 | தொழில்நுட்ப அதிகாரி (Portable Water) | 04 | PS 6 Category A | ரூபா 64,000.00 - ரூபா 69,000.00 |

### 1. பிரதி செயற்றிட்டப் பணிப்பாளர் (PS 2) - 01 பதவி (PMU) - கொழும்பு

1) இயைபுடைய துறையில் (சிவில் பொறியியல்) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்படும் இளமாணிப் பட்டத்தை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்திருத்தல்.

அல்லது

இயைபுடைய துறையில் (சிவில் பொறியியல்) பட்டத் தகைமைக்குச் சமனான பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்படும் தகைமை

அல்லது

இயைபுடைய துறையில் (சிவில் பொறியியல்) அங்கீகரிக்கப்பட்ட தொழில்சார் நிறுவனத்திலிருந்து பெற்றுக்கொண்ட நிகரான ஒரு தொழில்சார் தகைமை / ஒரு இணை அங்கத்துவம்

அத்துடன்

தகைமைக்குப் பின் முகாமைத்துவ மட்டத்தில் 13 வருடகால அனுபவம் அதில் 06 வருட காலம் சிரேஷ்ட முகாமைத்துவ மட்டம்.

2) இயைபுடைய துறையில் (சிவில் பொறியியல்) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்படும் இளமாணிப் பட்டத்தை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்திருத்தல்.

அல்லது

இயைபுடைய துறையில் (சிவில் பொறியியல்) பட்டத் தகைமைக்குச் சமனான பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்படும் தகைமை

மற்றும்

இயைபுடைய துறையில் (சிவில் பொறியியல்) அங்கீகரிக்கப்பட்ட தொழில்சார் நிறுவனத்திலிருந்து பெற்றுக்கொண்ட நிகரான ஒரு தொழில்சார் தகைமை அல்லது கூட்டுவர்த்தக பட்டய அங்கத்துவம். இலங்கை பொறியியலாளர் பேரவையில் அங்கத்தவராக இருக்க வேண்டும்.

அத்துடன்

இயைபுடைய துறையில் (சிவில் பொறியியல்) பட்டப் பின்படிப்புத் தகைமை இதற்கு தகைமைக்குப் பின் முகாமைத்துவ மட்டத்தில் 11 வருடகால அனுபவம் தேவை.

3) இயைபுடைய துறையில் (சிவில் பொறியியல்) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்படும் இளமாணிப் பட்டத்தை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்திருத்தல்.

அல்லது

இயைபுடைய துறையில் (சிவில் பொறியியல்) பட்டத் தகைமைக்குச் சமனான பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்படும் தகைமை

மற்றும்

இயைபுடைய துறையில் ஒரு பட்டப் பின்படிப்புத் தகைமை.

மற்றும்

இயைபுடைய துறையில் (சிவில் பொறியியல்) அங்கீகரிக்கப்பட்ட தொழில்சார் நிறுவனத்திலிருந்து பெற்றுக்கொண்ட நிகரான ஒரு தொழில்சார் தகைமை அல்லது கூட்டுவர்த்தக / பட்டய அங்கத்துவம்.

அத்துடன்

தகைமைக்குப் பின் முகாமைத்துவ மட்டத்தில் 09 வருடகால அனுபவம். இதில் 04 வருடங்கள் சிரேஷ்ட முகாமைத்துவ மட்டத்தில் இருக்க வேண்டும். இலங்கை பொறியியலாளர் பேரவையில் அங்கத்தவராக இருக்க வேண்டும்.

4) அகில இலங்கை அரச சேவையில் 1ஆம் தர அதிகாரி அல்லது இயைபுடைய துறையில் (சிவில் பொறியியல்) நிகரான நிலை.

அத்துடன்

1ஆம் தரப் பதவியில் குறைந்தபட்சம் 05 வருட கால அனுபவம்.
இலங்கை பொறியியலாளர் பேரவையில் அங்கத்தவராக இருக்க வேண்டும்.

- வெளிநாட்டு நிதித் திட்டங்களில் அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
- கிராமிய வீதிகள் மற்றும் நீர்ப்பாசனத்தில் அனுபவத்துடனான அபேட்சர்களுக்கு மேலதிக அனுகூலங்கள் கிடைக்கும்.

### 2 மற்றும் 3 சிரேஷ்ட பொறியியலாளர் மற்றும் பெறுகை நிபுணர் (PS 3) - 01 பதவி / சுற்றாடல் மற்றும் சமூக அபிவிருத்தி நிபுணர் (PS 3) - 01 பதவி (PMU) - கொழும்பு

1) இயைபுடைய துறையில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்படும் இளமாணிப் பட்டத்தை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்திருத்தல்.

அல்லது

இயைபுடைய துறையில் பட்டத் தகைமைக்குச் சமனான பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்படும் தகைமை

அல்லது

இயைபுடைய துறையில் அங்கீகரிக்கப்பட்ட தொழில்சார் நிறுவனத்திலிருந்து பெற்றுக்கொண்ட நிகரான ஒரு தொழில்சார் தகைமை / ஒரு இணை அங்கத்துவம்

அத்துடன்

தகைமைக்குப் பின் முகாமைத்துவ மட்டத்தில் 12 வருடகால அனுபவம்
சிரேஷ்ட பொறியியலாளர் பதவிக்கு: இலங்கை பொறியியலாளர் பேரவையில் அங்கத்தவராக இருக்க வேண்டும்.

2) இயைபுடைய துறையில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்படும் இளமாணிப் பட்டத்தை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்திருத்தல்.

அல்லது

இயைபுடைய துறையில் பட்டத் தகைமைக்குச் சமனான பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்படும் தகைமை

மற்றும்

இயைபுடைய துறையில் அங்கீகரிக்கப்பட்ட தொழில்சார் நிறுவனத்திலிருந்து பெற்றுக்கொண்ட நிகரான ஒரு தொழில்சார் தகைமை / ஒரு இணை அங்கத்துவம்

இயைபுடைய துறையில் அங்கீகரிக்கப்பட்ட தொழில்சார் நிறுவனத்திலிருந்து பெற்றுக்கொண்ட நிகரான ஒரு தொழில்சார் தகைமை அல்லது கூட்டுவர்த்தக பட்டய அங்கத்துவம் அல்லது இயைபுடைய துறையில் பட்டப் பின்படிப்புத் தகைமை

இலங்கை பொறியியலாளர் பேரவையில் அங்கத்தவராக இருக்க வேண்டும்.

3) அகில இலங்கை அரச சேவையில் 1ஆம் தர அதிகாரி அல்லது இயைபுடைய துறையில் நிகரான நிலை.

அத்துடன்

1ஆம் தரப் பதவியில் குறைந்தபட்சம் 05 வருட கால அனுபவம்.
சிரேஷ்ட பொறியியலாளர் பதவிக்கு: இலங்கை பொறியியலாளர் பேரவையில் அங்கத்தவராக இருக்க வேண்டும்.

- வெளிநாட்டு நிதித் திட்டங்களில் அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
- கிராமிய வீதிகள் மற்றும் நீர்ப்பாசனத்தில் அனுபவத்துடனான அபேட்சர்களுக்கு மேலதிக அனுகூலங்கள் கிடைக்கும்.

### 4 மற்றும் 8. திட்டக் கணக்காளர் (PS 4) - 05 பதவிகள் (PMU - கொழும்பு/ PIUs (வடக்கு, கிழக்கு/ வட மத்திய/ ஊவா மாகாணங்கள்)

1) இயைபுடைய துறையில் (கணக்கியல்) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்படும் இளமாணிப் பட்டத்தை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்திருத்தல்.

அல்லது

இயைபுடைய துறையில் பட்டத் தகைமைக்குச் சமனான பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்படும் தகைமை

அல்லது

இயைபுடைய துறையில் அங்கீகரிக்கப்பட்ட தொழில்சார் நிறுவனத்திலிருந்து பெற்றுக்கொண்ட நிகரான ஒரு தொழில்சார் தகைமை / ஒரு இணை அங்கத்துவம்

அத்துடன்

தகைமைக்குப் பின் முகாமைத்துவ மட்டத்தில் 08 வருடகால அனுபவம்

2) அகில இலங்கை அரச சேவையில் II அல்லது IIIஆம் தர அதிகாரி அல்லது இயைபுடைய துறையில் நிகரான நிலை.

அத்துடன்

II அல்லது IIIஆம் தரப் பதவியில் குறைந்தபட்சம் 08 வருட கால அனுபவம்.

- வெளிநாட்டு நிதித் திட்டங்களில் அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
- கிராமிய வீதிகள் மற்றும் நீர்ப்பாசனத்தில் அனுபவத்துடனான அபேட்சர்களுக்கு மேலதிக அனுகூலங்கள் கிடைக்கும்.

### 5. கணக்கியல் உதவியாளர் - 02 பதவிகள் (PMU) - கொழும்பு

குறைந்தபட்ச கல்வித் தகைமைகள் மற்றும் அனுபவம்

க.பொ.த. (சா/த) பரீட்சையில் சிங்களம்/தமிழ் மற்றும் ஆங்கில மொழி உட்பட மூன்று (03) பாடங்களில் திறமைச் சித்திகள் சகிதம் ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும் மற்றும் க.பொ.த (உ/த) பரீட்சையில் ஒரே அமர்வில் மூன்று (03) பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

மற்றும்

வெளிநாட்டு நிதியிடல் திட்டங்களில் கணக்கியல் உதவியாளராக 03 வருடங்கள் அல்லது அதற்கு மேற்பட்ட அனுபவம். MS-Office பொதிகளைப் பயன்படுத்தும் அறிவு மற்றும் கணனி அடிப்படையிலான கணக்கியல் முறைமையில் அறிவு தேவை.

### 6. சாரதி - 02 பதவிகள் (PMU) - கொழும்பு

குறைந்தபட்ச கல்வித் தகைமைகள் மற்றும் அனுபவம்

க.பொ.த. (சா/த) பரீட்சையில் இரண்டு (02) பாடங்களில் திறமைச் சித்திகள் சகிதம் ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும் மற்றும் சிறந்த பொறிமுறை அறிவு மற்றும் செல்லுபடியாகும் சாரதி உரிமம் வைத்திருக்க வேண்டும்.

மற்றும்

வெளிநாட்டு நிதியிடல் திட்டங்களில் சாரதியாக குறைந்தபட்சம் 05 வருடங்கள் அனுபவம்.

கடமை மற்றும் பொறுப்புகள்

திட்ட வாகனங்களை சிறந்த நிலைமையில் பராமரித்தல் மற்றும் செலுத்துதல்

### 7. அலுவலக உதவியாளர் - 02 பதவிகள் (PMU) - கொழும்பு

குறைந்தபட்ச கல்வித் தகைமைகள் மற்றும் அனுபவம்

க.பொ.த. (சா/த) பரீட்சையில் இரண்டு (02) பாடங்களில் திறமைச் சித்திகள் சகிதம் ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

மற்றும்

வெளிநாட்டு நிதியிடல் திட்டங்களில் அலுவலக உதவியாளராக குறைந்தபட்சம் 05 வருடங்கள் அனுபவம்.

கடமை மற்றும் பொறுப்புகள்

திட்ட வாகனங்களை சிறந்த நிலைமையில் பராமரித்தல் மற்றும் செலுத்துதல்

### 9. பொறியியலாளர் மற்றும் இணக்க அதிகாரி (PS 4) - 04 பதவிகள் PIUs (வடக்கு, கிழக்கு/ வட மத்திய / ஊவா மாகாணங்கள்)

1) இயைபுடைய துறையில் (சிவில் பொறியியல்) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்படும் இளமாணிப் பட்டத்தை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்திருத்தல்.

அல்லது

இயைபுடைய துறையில் (சிவில் பொறியியல்) பட்டத் தகைமைக்குச் சமனான பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்படும் தகைமை

அல்லது

இயைபுடைய துறையில் (சிவில் பொறியியல்) அங்கீகரிக்கப்பட்ட தொழில்சார் நிறுவனத்திலிருந்து பெற்றுக்கொண்ட நிகரான ஒரு தொழில்சார் தகைமை / ஒரு இணை அங்கத்துவம்

அத்துடன்

இயைபுடைய துறையில் (சிவில் பொறியியல்) தகைமைக்குப் பின் 08 வருடகால அனுபவம்.
இலங்கை பொறியியலாளர் பேரவையில் அங்கத்தவராக இருக்க வேண்டும்.

2) அகில இலங்கை அரச சேவையில் II அல்லது IIIஆம் தர அதிகாரி அல்லது இயைபுடைய துறையில் (சிவில் பொறியியல்) நிகரான நிலை.

அத்துடன்

II அல்லது IIIஆம் தரப் பதவியில் குறைந்தபட்சம் 08 வருட கால அனுபவம்.

- வெளிநாட்டு நிதித் திட்டங்களில் அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
- கிராமிய வீதிகள் மற்றும் நீர்ப்பாசனத்தில் அனுபவத்துடனான அபேட்சர்களுக்கு மேலதிக அனுகூலங்கள் கிடைக்கும்.

### 10. தொழில்நுட்ப அதிகாரி (Portable Water) (PS 6) - 04 பதவிகள் PIUs (வடக்கு, கிழக்கு/ வட மத்திய / ஊவா மாகாணங்கள்)

மூன்றாம் நிலை தொழில்நுட்பம்/ தொழிற்பயிற்சி நிறுவனத்தினால் வழங்கப்படும் தேசிய தொழிற் தகைமையில் 05ஆம் நிலைக்குக் குறையாத தேர்ச்சிச் சான்றிதழைப் பெற்றிருத்தல் வேண்டும்.

மற்றும்

தொழில்நுட்பத் துறைக்கு இயைபான பதவியொன்றுக்கான தொழிற்கல்வி ஆணைக்குழு மற்றும் விசேடத்துவ பரப்பில் குறைந்தபட்சம் 13 வருடகால அனுபவம் தேவை.

- வெளிநாட்டு நிதித் திட்டங்களில் அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
- சமூக நீர் அனுபவத்துடனான அபேட்சர்களுக்கு மேலதிக அனுகூலங்கள் கிடைக்கும்.

**பொது நிபந்தனைகள்**

- தெரிவுசெய்யப்படும் முறை: தகைமைகள் மற்றும் அனுபவம் அடிப்படையில் குறும் பட்டியலிடப்பட்ட விண்ணப்பதாரிகள் ஒரு நேர்முகத் தேர்விற்காக அழைக்கப்படுவர்.
- வயது : 2019-03-05ஆம் திகதிய 01/2019ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றுநிருபத்தின் பிரகாரம்.
- மாதாந்த சம்பளத்தில் ஊழியர் சேமலாப நிதிக்கு (EPF) ஊழியரின் பங்களிப்பாக 8% அறவிடப்படும் என்பதுடன் தொழில்வழங்குநரின் பங்களிப்பாக 12% மற்றும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்கு (ETF) 3% பங்களிப்புச் செய்யப்படும்.
- வேலைவாய்ப்பு விதிகள்: அனைத்து நியமனங்களும் ஆரம்பத்தில் ஒரு வருட காலத்திற்கு ஒப்பந்த அடிப்படையில் இருக்கும், மேலும் திட்டத்தின் காலம், பதவியின் அவசியம் மற்றும் திருப்திகரமான செயற்திறன் ஆகியவற்றைப் பொருத்து ஆண்டுதோறும் ஒப்பந்த அடிப்படையில் சேவை நீட்டிப்புக்கான வசதியும் இருக்கும்.

தற்போது அரசாங்க சேவையில் உள்ள விண்ணப்பதாரர்கள் தங்களது விண்ணப்பங்களை நிறுவனத்தின் தலைவரின் ஊடாக அனுப்புதல் வேண்டும் மற்றும் ஆர்வமுள்ள நபர்கள் தமது சுய தரவுகள் அடங்கிய விண்ணப்பத்தை கல்வித் தகைமைகள் மற்றும் அனுபவத்தை உறுதி செய்யக்கூடிய சான்றிதழ்களின் பிரதிகள் சகிதம் செயலாளர், பொது நிர்வாகம், மாகாண சபை, உள்ளூராட்சி அமைச்சு, இல. 330, யூனியன் பிளேஸ், கொழும்பு-02 எனும் முகவரிக்கு 2025 பெப்ரவரி 28ஆம் திகதி பி.ப. 3.00 மணிக்கு முன்னர் கிடைக்கும் வகையில் பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.

**குறிப்பு:** கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியைக் குறிப்பிடுதல் வேண்டும்.

**செயலாளர்,**
**பொது நிர்வாகம், மாகாண சபை, உள்ூராட்சி அமைச்சு.**